கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கக்கூடிய முறையின் காரணமாகத்தான் சாதாரண மக்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை ரத்து செய்து விட்டால் சிறு கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று நினைக்கிறவர்கள், இனி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இந்த முறைதான் நீடிக்கவேண்டும். இன்னும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம் எல்லாம்.

* 323 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) 1961–62-ல் சிமெண்டில் கலப்படம் செய்ததாக தமிழ் நாட்டில் எத்தனை பேர்கள்மீது வழக்குகள் போடப்பட்டன ?

(இ) விதிக்கப்பட்ட தண்டனையின் விவரம் என்ன ?

(உ) சிமெண்டில் கலப்படம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் என்ன தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) சிமெண்ட் அத்தியாவசியமான பொருள் என்றும் கலப்படம் செய்வது சட்டப்படி குற்றம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Municipal Chairman (Salem)

* 324 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that a No-Confidence Motion has been passed against the Chairman of the Salem Municipality, and of the filing of a writ by the Chairman in the High Court of Judicature at Madras for stay; and

(*b*) if so, the orders passed by the Government to transact the business of the Salem Municipal Council?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) சேலம் நகரசபை தலைவர் ரிட் மனுவை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்ததால் நகரசபை அலுவல்களை செயல்படுத்த அரசினர் ஆணை தேவையில்லை. ஏனெனில், சென்னை மாவட்ட நகரசபை சட்டப்படி நகரசபை உதவித் தலைவர், நகரசபை அலுவல்களை தலைவரில்லாத சமயத்தில் செயல்படுத்த கடமைப்பட்டிருக்கிறார்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நகரசபைத் தலைவர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் கேஸ் தொடர்ந்திருக்கிறபடியால் அவர்களுக்கு நகரசபைத் தலைவர் ஸ்தானம் உண்டா ? இல்லையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 19–2–1962-ல் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

District Development Council (Tiruchirappalli North)

* 325 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to place on the table of the House, a statement containg the resolutions received by the Government from the District Development Council, Tiruchirappalli North, for the years 1960 and 1961, together with the action taken on each?